www.tamilarangam.net

# தமிழர் சமுதாய இளைஞர் மன்றம்

அன்புள்ள பெற்ருேர்களே/பிள்ளைகளே!

தாயகம் விட்டுப் புலம்பெயர்ந்து வந்து வாழும் எமது குழந்தைச் செல்வங்களின் எதிர்காலங் குறித்து எழுந்த சிந்தனையின் பிரதிபலிப்பாகவே இந்த அன்பு மடலை உங்கள் முன் வைக்கத் துணிந்துள்ளோம்

தமழர் சமுதாய இளைஞர் மன்றம் என்ற இவ்வமைப்பு தமிழ் மக்களின் குறிப்பாக எமது இளம் சந்ததியினரின் கலாச்சாரம், கலை மற்றும் விளையாட்டு போன்ற தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து எவ்வித சுய விளம்பரங்களுக்கும் இடமளிக்காது பெற்ருேர்களாலும் சமுதாய நலம் பேணும் உள்ளங்களினுலும் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் லூரசியம் பகுதியிலும் அதற்கு அண்மிய பகுதியிலும் வாழும் தமிழர் சமுதாயத்தின் உணர்வுகளை ஒன்று கூட்டி எமது குழந்தைகள் இளைஞர்கள் முதுமக்கள் யாவரும் இணைந்து செயல்பட வேண்டுமென்ற பேரவாவின் உந்தலிலேயே இவ்வமைப்பினை நமக்கென உருவாக்கும் பணியில் நம்முட்சிலர் அடியெடுத்து வைத்துள்ளோம். இம்மடலை எழுதும் எமது முயற்சி ஓர் ஆரம்பப்படியே ஆயினும் சிந்தனைகள் சங்கமிக்கும் ஒரு களமாக நாம் இதனை ஆரம்பித்திருக்கிருேம்.

ஏனைய தேசிய இனங்களின் கலை பண்பாடு உணர்வு வெளிப்பாடுகளை அறிந்து உணர்ந்து தெரிந்து கெள்ளும் அதேவேளையில் நமது குழந்தைகள் தமது தாயகச் சொத்துக்களாகிய பண்புகள், வாழ்க்கை முறைகள், சமூக முன்னேற்றங்கள், கலாச்சாரங்கள் என்பன அவரவர் தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப கலந்துரையாடல்கள், பாட்டுக்கள், நடனங்கள், ஓவியங்கள், நாடகங்கள் போன்ற வடிவங்களில் ஏற்பாடுகள் செய்வது என்பது எமது எண்ணக் கருவிற் சிலவாகும்.

இவ்வமைப்பினுல் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இடம் பெறும்.

இவ்வமைப்பில் மகிழ்தல், களியாட்டங்கள், பொழுது போக்குகள் என்பன அவ்வப்போது நடைபெறினும், எவ்வித டிஸ்கோ அல்லது மதுபானஙங்களோ ஊக்குவிக்கப்படமாட்டாது.

இவ்வமைப்புப் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு வசதியாக எதிர்வரும் தைமாதமளவில் ஒரு ஒன்று கூடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்து கொள்ள விரும்பும் அனைவரையும் கீழே தரப்பட்டிருக்ம் தொலைபேசி எண்களில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கிருேம்

இப்படிக்கு,

தமிழர் சமுதாய இளைஞர் மன்றம்.

தொடர்புகளுக்கு
திருமதி விஜயகுமார், 691 3778, திரு உதயக்குமார் 691 7760
செல்வன் ராம் பிள்ளை 852 2711, திரு கருணநிதி ~~691 7679~~
திரு வேந்தர்கோன் 692 3495

www.tamilarangam.net

# TAMIL COMMUNITY AND YOUTH CENTRE

The Tamil Community and Youth Centre has been formed by parents and friends who are interested in strengthening the cultural links among young people.

The centre aims to raise cultural awareness particularly among young people by means of group discussions, songs, dance, and drama and to organise friendly sports activities for people of all ages.

Both Tamil and English language will be used in the activities.

There will be lots of fun and entertainment in the activities of the centre, but no disco or alcohol would be encouraged.

The Tamil Community and Youth Centre welcome parents and friends to build a wider network. In the view of this, a friendly meeting has been organised in Jan 95.

Yours

Tamil Community and Youth Centre.

For more details please contact anyone of the following members:-

| | | | |
|---|---|---|---|
| Mrs. M.S.Pillai | 852-2711 | Mr. Uthayakumar | 691-7760 |
| Mrs. Vijayakumar | 691-3778 | Mr. Karunanithy | ~~691-7679~~ |
| Mr. Ventharkone | 692-3495 | | |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்